# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## OS.No.6/2024

PW1– சரவணக்குமார் நாள்.01.04.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

மாரிமுத்து எழுதிவைத்த கிரயபத்திரத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால் அவர் அவருடைய மகனுக்கு 2023ம் ஆண்டில் தானசெட்டில்மெண்ட் எழுதிவைக்கும் காலத்தில் அந்த விவரம் தெரிந்தது. தாவா 1வது அயிட்டசொத்திற்கு மேற்குபக்கம் 1ஏக்கர் 40 செண்ட் நிலம் உள்ளது. அந்த 1ஏக்கர் 40செண்ட் நிலம் அதை வாங்கிய மாரிமுத்துவிற்கு சொந்தம். அந்த 1ஏக்கர் 40செண்ட் நிலத்தின் கீழ்புற எல்லை எங்களுடைய தாத்தா பெருமாளின் பூர்விக நிலமாகும். மேற்படி 1ஏக்கர் 40செண்ட் நிலத்திற்கு கிழக்கு மாலாக மாரிமுத்து நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கோவிந்தசாமியும், முருகேசனும் சேர்ந்து மாரிமுத்துவிற்கு எழுதிகொடுத்த கிரயஆவணத்தில் கிழக்கு மாலாக கிரயம் பெறுபவர் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு தற்போது 48 வயதாகிறது. என்னுடைய தாய்மாமா மாரிமுத்துவை என்னுடைய சுமார் 5வயது முதல் தெரியும். 1968ம் ஆண்டு என்தாய்மாமா மாரிமுத்து எந்த முறையில் திருமணம் செய்தார் என்று எனக்கு தெரியாது. மாரிமுத்துவிற்கு 3 ஆண்மகன்கள் மற்றும் 1 மகள் உண்டு. அவர்கள் தற்போது இருக்கிறார்கள். மாரிமுத்துக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் கழித்து முதல் குழந்தை பிறந்தது என்று எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு ஆண்மகனுக்கு சொத்துக்கள் இருந்தால் தான் பெண் கொடுப்பார்கள் என்றால் சரிதான். மாரிமுத்து கல்யாணத்திற்காக அவர் அப்பாவும், தாத்தாவும் சேர்ந்து தாவா சொத்தை கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிராது 2வது அயிட்டசொத்து தற்போது மெத்தைவீடாகவும், அதற்கு முன்பு ஓட்டுவீடாகவும், அதற்கு முன்பு கூரை வீடாகவும் இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு 1968ம் ஆண்டு முதல் வீட்டு வரி ரசீது போடுகிறார்கள். அந்த

வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளது. எங்கள் ஊரில் தரைவரி உண்டு. அந்த வீட்டின் விஸ்தீர்ணம் சுமார் 3 செண்ட் இருக்கும். பிராது சொத்துவிவரத்தில் 2வது அயிட்ட சொத்தின் விஸ்தீர்ணம் 5 செண்ட் என்று தவறாக காட்டியுள்ளேன் என்றால் என்தாத்தா அருகில் 2செண்ட் நிலத்தை வாங்கியுள்ளார். தாவா 2வதுஅயிட்ட சொத்தின் விஸ்தீர்ணம் 3செண்டாக இருந்து 1968ம் ஆண்டு என்னுடைய தாத்தாவும், அவருடைய அப்பாவும் மாரிமுத்துவிற்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் 3செண்ட் இருந்த விவரம் எனக்கு நன்கு தெரியும். அந்த 3செண்டில் கூரைவீடு இருந்தது. அந்த கூரைவீட்டிற்கு வடக்கே உள்ள சொத்து என்மாமா மாரிமுத்துவின் உடன்பங்காளியின் சொத்தாகும். தாவா 2வது இலக்க சொத்திற்கு வடக்கே ரோடுவரை உள்ள பகுதி மாரிமுத்து வசம் உள்ளது என்றால் ரோட்டை ஒட்டியுள்ள பகுதி மட்டும் என்தாத்தா கிரயம் வாங்கியது. மற்ற பகுதி மாரிமுத்து வாங்கியது ஆகும். ரோடுவரை உள்ள பகுதி மாரிமுத்து 3பத்திரங்கள் மூலம் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக ரோட்டை ஒட்டியுள்ள பகுதி என்தாத்தா வாங்கிய சொத்து என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. கூரைவீடு பகுதி மற்றும் அதோடு சேர்ந்து ரோடுவரை உள்ள பகுதிக்கு மேற்கே சுப்பையா என்பவரின் காலிமனை உள்ளது. கீழ்புறம் சிமெண்ட் ரோடு செல்கிறது. அது நத்தம் பகுதியாகும். எங்கள் ஊரில் நத்தம்பகுதிக்கு பட்டா வழங்கியுள்ளார்கள். ஆரம்பத்தில் 3செண்டாக இருந்த தாவா 2வது அயிட்டசொத்து கூரைவீடாக இருந்ததை பெருமாளும், பொன்னுசாமியும் மாரிமுத்துவிற்கு கொடுத்து அவர் ஓட்டுவீடாக கட்டி அதன்பின்னர் மெத்தை வீடாக கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தில் தற்போது வீடு உள்ள பகுதி 3செண்ட் விஸ்தீர்ணத்திற்கு மேல்இருக்கும் என்றால் சரிதான். நான் என்னுடைய கட்சி படியே 3செண்ட் பதிலாக தவறாக 5செண்ட் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய சொத்தில் வீடு கட்டியுள்ள சங்கதிகளை மறைத்து பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து சொந்தமாக வாங்கிய சொத்தில் எனக்கு

உரிமையில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் 1செண்ட் இடம் சுமார் 10லட்சம் ரூபாய் போகும். நிலமாக இருந்தது தற்போது வீட்டு மனையாக ஆகிவிட்டது. நான் தவறான முறையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டில் இன்றுவரை மாரிமுத்து தான் இருந்துவருகிறார் என்றால் சரிதான். நான் நீதிமன்ற கட்டணத்தை பிரிவு 37(2)ன் கீழ்தவறாக செலுத்தியுள்ளேன் என்றும் பிரிவு 37(1)ன்படி கணக்கிட்டுதான் செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. 1968ம் ஆண்டில் எங்களுக்கும் மாரிமுத்துவிற்கும் விரோதம் கிடையாது. நான் ஆவணங்களுக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாரிமுத்துவின் சொத்தில் பாகம்கோருவது காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு போடுவதற்கு வியாஜ்ஜி மூலம் என்னவென்றால் என்மாமா எங்களிடம் நீங்கள் எல்லோரும் கையெழுத்துபோடுங்கள் ஆளுக்கு ஐந்து, ஐந்து லட்சம் தருகிறேன் என்று சொன்னார். அவ்வாறு சொல்லிவிட்டு எங்களுக்கு தெரியாமல் மகனுக்கு பத்திரம் எழுதிவிட்டார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் அந்த பத்திரம் எழுதிகொடுத்தார். மாரிமுத்து அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து அவர் மகனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுக்க உரிமையுள்ளது என்றும், அதை நான் ஆட்சேபிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. மாரிமுத்துவின் மற்ற மகன்கள் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஆட்சேபணை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் காலாவதிதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாசொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 14.09.1983ம் தேதிய விடுதலைப்பத்திரத்தில் என்னசொத்து எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த விடுதலைப்பத்திரம் பற்றி என்தாத்தா சொல்லி ஒன்றாக பாடுபடும்போது தெரியும். 1968ம் ஆண்டு தாவா 1வது அயிட்ட சொத்தை என்தாத்தாவும், அவருடைய அப்பாவும் மாரிமுத்துவிற்கு

கொடுத்துவிட்டதால் தான் 1976ம் ஆண்டு ஏற்பட்ட கிரயஆவணத்தில் நான்கெல்லையில் தாவா 1வது இலக்க சொத்து என்மாமா மாரிமுத்துவின் சொத்து என்று காட்டப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தாவாசொத்துக்கள் நான் கூறுவதுபோன்று கூட்டுஅனுபவத்தில் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 29.09.1993ல் மாரிமுத்துவிற்கு பெரியசாமி எழுதிகொடுத்த பதிவுசெய்யப்படாத பாகபாத்திய விடுதலைப்பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. என்தாத்தா பெருமாளின் அண்ணன் பெயர் மருதை ஆகும். அந்த மருதையின் மகன் பெரியசாமி. நிலம், வீடு சம்மந்தமாக 29.09.1993ல் பெரியசாமி எழுதிகொடுத்த பாகபாத்திய விடுதலைப்பத்திரம் பற்றி எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் அனுபவத்தில் இருக்கிறோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 2வது அயிட்ட சொத்திற்கு வடக்கே ரோடுவரை உள்ள சொத்து மாரிமுத்துவின் சொத்து என்றால் சரியல்ல. 1ம்வாதிக்கு வழக்கை நடத்துவற்கு விருப்பம் கிடையாது என்றும், நான் தான் அவர் உடல்நிலை சரியில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி செல்வராஜ்க்கு தான் தாவா 1வதுஅயிட்டம் சொந்தம் என்றும், தாவா 2வது அயிட்ட சொத்து மாரிமுத்துவிற்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சாட்சிகளுக்கும் எனக்கும் விரோதம் கிடையாது.

<u>மறுவிசாரணை:</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.